EASTERN UNIVERSITY
10 JUN 20

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

## GEOS 2102 தென்னாசியாவும் கிழக்காசியாவும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து மூன்று வினாக்களுக்கும், பகுதி – II இலிருந்து ஒரு வினாவிற்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

தென்னாசியப் புறவரிப்படம் வழங்கப்படும்.

## பகுதி – I

1) "தென்னாசியப் பிராந்தியத்தின் அமைவிடமும் தரைத்தோற்ற அம்சங்களும் தென்னாசியாவின் இடம்சார்ந்த காலநிலை வேறுபாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

2) (i) தென்னாசியாவின் தரைத்தோற்ற அம்சங்களை அடையாளப்படுத்தி சுருக்கமான விளக்கம் தருக.

(12 புள்ளிகள்)

(ii) தென்னாசியாவின் மண் பரம்பல் தன்மைக்கேற்ப பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மாறுபடும் தன்மையினை ஆராய்க.

(13 புள்ளிகள்)

3) "இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகள் அடிப்படையானதாகும்". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஐந்தாண்டுத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)

4) (i) நகராக்கம் என்பதனை வரையறை செய்க.

(05 புள்ளிகள்)

(ii) தென்னாசிய நாடுகளின் நகராக்க வளர்ச்சி வரலாற்றுக் காலத்துடன் தொடர்புபட்டுள்ளதாகக் கருதப்படுவதை நீர் ஏற்றுக்கொள்வீரா? ஆதாரங்கள் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

(iii) "தென்னாசிய நாடுகளின் துரித நகராக்க விருத்தி காரணமாக அங்கு சூழலியல் பிரச்சினைகள் தீவிரமடைந்து வருகின்றன". இக்கூற்றிற்கான ஆதாரங்களை உதாரணங்களுடன் ஆராய்க.

(10 புள்ளிகள்)

## பகுதி – II

05. "நாடுகளின் பொருளாதார ரீதியான வளர்ச்சிக்கு கைத்தொழில்துறையின் வளர்ச்சி இன்றியமையாதது". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை யப்பானின் கைத்தொழில் விருத்தியினை உதாரணமாகக் கொண்டு ஆராய்க.
(25 புள்ளிகள்)

06. சீனாவில் அதிகரித்துவரும் குடித்தொகையின் காரணமாக ஏற்பட்டு வரும் பிரச்சினைகளையும் அதனைக் குறைப்பதற்கு காலத்திற்கு காலம் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளையும் பற்றிக் கருத்துரைக்க.
(25 புள்ளிகள்)

***